Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 67 கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன்; உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன் சங்.9:1 செப்டம்பர் 2021 No.9

அசாதாரண ஐக்கிய ஜெபம்

Extra ordinary united prayer

Bill Elliff

சில ஆண்டுகளுக்கு முன்னாக ஒருமுறை நான் விமானத்தில் பயணம் செய்தபோது, எனக்கருகில் உட்கார்ந் திருந்த ஒருவரை கவனித்தேன். அவர் விலையுயர்ந்த றோலெக்ஸ் கைக்கடிகார மும், அழகிய உடையும் விலைமதிப்பு டைய சப்பாத்துக்களையும் அணிந்திருந் தார். 'இவர் மிகவும் உயர்ந்த நிலை யிலுள்ள அதிகாரியாயிருக்கலாம்' என்று எண்ணினேன். ஆனால் ஆவியானவர் ஒரு கேள்வியை என்னில் எழுப்பினார் : "இந்த விமானத்தில் பயணம் செய்வதில் மிகவும் வல்லமையுடையவர் யார்?" என்பதுதான் அந்தக் கேள்வி. அதற்குரிய விடையையும் அவர் தந்துவிட்டார். "இந்த விமானத்தில் இருப்பவர்களில் யார் ஜெபிக்கிறார்களோ அவர்களே மிகவும் வலிமையுடையவர்கள்". எந்த அறையிலும் கூடுகையிலும் யார் ஜெபிக் கிறார்களோ அவர்களே மிகுந்த வல்லமை யுடையவர்கள்.

ஒரு தனிமனிதன் மட்டுமல்ல, ஒரு குடும்பம் முழுவதும் அல்லது ஒரு சபை முழுவதும் இடைவிடாமல் ஜெபித்தால் எவ்வளவு வல்லமையான காரியங்கள் நிகழ முடியும். நமது தேசம் அல்லது உலகம் முழுவதும் இந்நாட்களில் இருக்கும் அவசர நிலை குறித்து தேவ பிள்ளைகள் இணைந்து தேவன் இடை பட்டு தமது வல்லமையை பரத்திலிருந்து இறங்கச் செய்யும்படி ஜெபிக்கலாமே. ஜார்ஜ் முல்லரின் மருமகன் A.T.பியர்சன், "எந்த ஒரு ஆவிக்குரிய விழிப்புணர்வும் எந்த நாட்டிலோ எந்த இடத்திலோ ஐக்கிய ஜெபமில்லாமல் ஆரம்பித்த தில்லை" என்று கூறியுள்ளார்.

நாம் ஏன் சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும்? லூக்.18:1. முன்பைக் காட்டிலும் இப்போது நாம் ஏன் இணைந்து பரத்துக்கு நேராக உலகுக்காகவும், தேசத்துக்காகவும் ஜெபிக்க வேண்டும்? எபேசி.6:10-20 வசனங்களிலிருந்து மூன்று காரணங் களைக் குறிப்பிட விரும்புகிறேன். வசனங்களைப் படியுங்கள்.

இடைவிடாமல் செயல்படும் சத்துரு

பிசாசு எப்போதும் செயல்படு கிறவன். அவன் தூங்குவதோ நின்று விடுவதோ இல்லை. அவன் Covid-க்கு பயந்து செயல்படாமலிருப்பதில்லை. அவனுடைய தன்மைகளில் ஒன்று அதிகாரம். அது சக்தி வாய்ந்ததாயிருந் தாலும் நிலையற்றது. நமது போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல அதிகாரங்களோடு என்று பவுல் கூறுகிறார். எனவே அதிகாரத்திற்கு ஒரு மட்டம் இருக்கிறது என்பதைக் காண்பிக் கிறது. வல்லமைகள் என்ற பன்மைச் சொல் அவன் பல்வேறு நிலைகளில் செயல்படுகிறவன் என்பதைக் காண்பிக் கிறது. அவன் அனேக நிகழ்வுகளை ஏற்படுத்துகிறான். தேவனுடைய செயல் களிலும் தலையிடுகிறான். பவுல் இப்பிர பஞ்சத்தின் லோகாதிபதிகளோடும் போராட்டம் உண்டு என்கிறார். உலக மெங்கும் அவனுடைய செயல்பாடு காணப்படுகிறது.

அதிகாரம் இருப்பதோடு அவன் திட்டங்களையும் வைத்திருக்கிறான். வசனம் 11-ல் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களா கும்படி என்று படிக்கிறோம். அதாவது அவன் அனேக வழிமுறைகளைக் கையாளுகிறவன்.

அனேகக் கிறிஸ்தவ தலைவர்கள் சரியாகத் தெரிந்தெடுப்புகளை செய்யா மலிருப்பதால் இந்த தந்திரங்களில் விழுந்து விடுகிறார்கள். அவனது தந்திரங் களை அறிவீர்களா? அவன் நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறான். நமது வாழ்வு முறையை நன்கு கவனித்து தேவராஜ்யம் கட்டப்படுவதற்குத் தடையை ஏற்படுத்தத் திட்டம் தீட்டு கிறான்.

சத்துரு நமது பிள்ளைகள் பேரப் பிள்ளைகள் மீதும் கவனம் செலுத்து கிறான். அவர்களைக் குறித்த சகல விபரங் களும் அவனிடத்திலுண்டு. அவனு டைய திட்டங்களை முறியடிக்கத்தக்க தான ஆயுதங்களை ஜெபத்தோடு பயன் படுத்தாவிட்டால் அவன் அவர்களை விழுத்தள்ளிவிடுவான்.

அவன்தான் பணி செய்ய தீய சூழலையும் உருவாக்குகிறான். இதனைக் குறித்து பவுல் 13-ம் வசனத்தில் தீங்கு நாளில் அவைகளை எதிர்க்கவும் என்று குறிப்பிடுகிறார். இன்று நாம் தீங்கு நாட்களுக்குள்ளேதானே இருக்கிறோம்.

ரோமர் முதல் அதிகாரத்தில் ஜனங்கள் தேவனைப் பற்றிக் கொண் டிருக்க மனதில்லாதிருந்தபோது, தேவனும் தகாதவைகளைச் செய்யும்படி அவர் களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார் என்று 28-ம் வசனத்தில் படிக்கிறோம்.

ஏனெனில் சரியானதைச் சரி என்றும் தவறானதைத் தவறு என்றும் தீர்மானிக்கும் திறனை அவர்கள் இழந்துவிடுகிறார்கள். இந்நாட்களில் அநேகர் இந்நிலையில் காணப்படு கிறார்கள். நீங்கள் இந்நிலையிலிருந்தால் போர்வீரனுடைய வரிசையிலிருந்து இடைவெளி உண்டுபண்ணுகிறீர்கள். சத்துரு அந்த இடைவெளியில் நுழைந்து விடுவான்.

தொடரும் போராட்டம்

எதிரி தொடர்ந்து செயல்படுவ தால் போராட்டமும் தொடருகிறது. நமக்குப் போராட்டம் உண்டு வச.12. இது நம்முடைய போராட்டம், வேறோருவருடையதல்ல. இது சொகு சாக உட்கார்ந்துகொண்டு தொலை நோக்கி மூலம் எங்கோ நடைபெறும் சண்டையைப் பார்த்துக் கொண்டிருப் பது போன்ற ஒரு அனுபவமல்ல. நாம் நேருக்கு நேராக இந்த எதிரியுடன் நாம் இருக்கும் இடத்திலிருந்தே போராடும் ஒரு அனுபவம்.

ஒருவேளை இந்தப் போராட் டத்தைக் குறித்து நீங்கள் உணராம லிருந்தால் சத்துரு ஏற்கெனவே மேற் கொண்டுவிட்டான் என்பதுதான் பொருள். சத்துரு உங்களை ஒரு கரையில் ஒதுக்கி விட்டிருக்கிறான். அவன் இனி மேல் உங்கள்மேல் கவனம் செலுத்த வேண்டியதில்லை. எதிரியின் தாக்குதலை நீங்கள் உணரமுடியவில்லை. இது விசுவாசியின் வாழ்வில் பயங்கரமான நிலை.

ஆனாலும் நீங்கள் எதிர்க்கத் திராணியுள்ளவர்களாகும்படி என்று 13-ம் வசனம் சொல்லுகிறது. எனவே எதிரியை எதிர்க்கமுடியும் என்பது தெளிவாகிறது. நாம் வெற்றிபெற முடியும். ஏனெனில் உலகத்திலிருக்கிற வனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் 1 யோவா.4:4. எனவே தேவன் விரும்பு கிறபடி சாத்தானை நாம் எதிர்த்தால் அவன் நம்மைவிட்டு ஓடியே போய் விடுவான் யாக்.4:7. அவன் உங்களைச் சுற்றிச்சுற்றி வரலாம். ஆனால் தொடர்ந்து எதிர்த்து நிற்க வேண்டும்.

இந்தப் போராட்டத்தில் நாம் எப்படி ஈடுபட வேண்டும்? கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமை யிலும் பலப்பட வேண்டும் வச.10. நம்முடைய பெலனால் இது கூடாதது.

(3-ம் பக்கம் பார்க்க)

ஒரு நாளில் எட்டு அல்லது பத்து மணி நேரம் ஜெபிக்காவிட்டால் அந்த நாள் வீணாகப் போய்விட்டது என நினைக் கிறேன். – ஜான் வெல்ச்

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

மிகவும் விசேஷித்த விடுதலை

1912-ம் ஆண்டு J. Stuart Holden ஒரு கிறிஸ்தவ எழுப்புதல் கூடுகையில் பிரசங்கிக்க அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டார். எனவே லண்டனிலிருந்து நியுயார்க் செல்ல டைட்டானிக் கப்பலில் முதல் வகுப்பு சீட்டு பெற்றுக்கொண்டார். திடீரென அவரது மனைவி சுகவீனமடைந்து விட்டார். மிகுந்த மனவேதனையுடன் பிரயாணத்தை ரத்து செய்துவிட்டு வீட்டிலிருந்து மனைவியை கவனிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் செல்லவிருந்த டைட்டானிக் கப்பல் உடைந்து பிரயாணிகள் மாண்டதை அவர் கேள்வியுற்றார். தேவன் தமக்குக் கொடுத்த அந்த அற்புதமான விடுதலையை குறிக்கும்படியாக அவர் பெற்றிருந்த பயணச் சீட்டை ஒரு சட்டத்தில் "**அவர் உன் ஆத்துமாவை அழிவுக்கு விலக்கி மீட்டு**" சங்.103:4 என எழுதி வைத்தார்.

வாக்குத்தத்தம்

என் தாசனாகிய இஸ்ரவேலே, நான் தெரிந்துகொண்ட யாக்கோபே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே,

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.

இதோ, உன்மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இலச்சையடைவார்கள்; உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமற் போவார்கள்.

உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள்.

உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து : பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன். ஏசாயா 41:8-13

இறைப்பணியாளர்கள் மிகவும் அதிமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

ஜூலை 1-ம் தேதி (1/7) ஆகஸ்ட் மாத பத்திரிகைக்கான செய்திகளை அச்சிடுவதற்காக அளித்தேன். அதுபோல ஆகஸ்ட் 1-ம் தேதி, செப்டம்பர் மாத செய்திகளை அளிக்கிறேன். கர்த்தருக்குச் சித்தமானால் இந்த ஆண்டு இறுதிக்குள் தேவன் சூழ்நிலைகளை அனுகூலமாக்குவார் என்று நம்புகிறேன்.

2021 செப்டம்பர் *மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன். ஜெபத்தைக் குறித்து ஒரு கட்டுரை எழுத வேண்டிய திருப்பதால், முகவுரையாக மூன்று காரியங்களை மாத்திரம் எழுதுகிறேன்.*

1. யார் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி

*வருடத்திற்கு ஒருமுறை வெவ்வேறு இடங்களுக்கு எனது குடும்பத்தினர், உறவினர், ஊழியர்களுடன் சென்று உபவாச ஜெபம் நடத்தி வந்தோம். கர்த்தர் என்னிடம், **மாதந்தோறும்** உபவாச ஜெபம் நடத்தச் சொன்னார். எங்கள் சிறிய ஜெபக்குழுவில் உள்ளவர்களிடம் இதை அறிவித்து, **யார் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி,** மாதந்தோறும் உபவாச ஜெபம் நடத்தப் போகிறேன் என்றேன். இது நடந்தது 2015-ம் ஆண்டு.*

நாகர்கோவில் பட்டணத்தில் ஊழியம் செய்யும் ஒரு போதகர் எனக்கு போன் பண்ணி, வருடத்திற்கு ஒருமுறை என்பதை இரண்டு முறை, மூன்று முறை என்று மாற்றி நடத்துவார்கள்; நீங்கள் ஒரேயடியாக 12 உபவாச ஜெபங்கள் என்கிறீர்களே என்று ஆச்சரியப்பட்டார். கர்த்தருக்குஸ்தோத்திரம், 2016-ம் ஆண்டு முதல் டெல்கி, பாம்பே, மைசூர், பாண்டிச்சேரி, சென்னை, அந்தமான் உட்பட சுமார்

2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

1. **எல்லா ஊழியங்களைப் போல வருகையின் தூதன் ஊழியத்தையும் தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.**
2. மாதந்தோறும் தபாலில் / வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.
3. உங்கள் பிறந்த நாள், திருமண நாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சியான தினங்களில், ஆண்டவருடைய ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பி, ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுங்கள்.

"அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே **மிகுந்த உதாரத்துவமாய்** கொடுத்தார்கள்" 2 கொரி.8:2.

45 *உபவாச ஜெபங்களை நடத்த அன்பின் ஆண்டவர் இரக்கம் பாராட்டினார்.*

2. யார் இடம் தந்தாலும் சரி, தராவிட்டாலும் சரி

2022-ம் ஆண்டு உபவாச ஜெபம் நடத்துவதற்காக 12 இடங்களை தேவ ஒத்தாசையோடு ஒழுங்கு செய்து வருகிறோம். 12 இடங்கள் கிடைக்க தேவனுடைய பிள்ளைகள் பாரத்தோடு ஜெபிக்குமாறு பட்சமாய் கேட்கிறேன்.

*இதை வாசிக்கிற **நீங்கள் ஒரு சபை ஊழியரா?** உங்கள் சபை கட்டடத்தை, கட்டாயம் உபவாச ஜெபத்திற்கு திறந்து தாருங்கள், ஜெபிக்கிற 50 பேர் வந்தாலே போதும்.*

3. அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி எசேக்.2:5

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர் தயவாய் எங்களுக்கு தகவல் தாருங்கள் என்று மாதந்தோறும் அச்சிடுகிறோம், ஆனாலும் அநேகர் அதை கேட்பதில்லை. கவனியுங்கள், எங்கள் மொபைல் போனில் கீழே அச்சிடப்பட்டுள்ள தகவல் மாத்திரம் வரும். அதன் மூலம் பணம் அனுப்பின நீங்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியாது.

Your a/c no
xxxxxxxxxxx439
is credited by ·Rs. 500 on
12.07.21 by a/c linked to mobile
9xxxxxx069

வங்கி வழியாக ரூபாய் 500 அனுப்பினாலும் சரி, 5000 அனுப்பினாலும் சரி, நீங்கள் தகவல் தந்தால்தான் உங்கள் பெயருக்கு ரசீது அச்சிட்டு, உங்கள் முகவரியில் பதிவு பண்ணி, 2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப முடியும். **இல்லாவிட்டால் "நான் வருகையின் தூதன் பத்திரிகைக்கு பணம் அனுப்பினேன்,**

(6-ம் பக்கம் பார்க்க)

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

கர்த்தருக்குள்ளிருக்கும் போது நாம் பலவீனரல்ல. எங்கிருந்தாலும் எந்த நிலையிலிருந்தாலும் பலப்பட வேண்டும். அவர் உங்களுக்குக் கொடுத்த பணிவிடையை நிறைவேற்றவும் போராடவும் அவரது பெலத்தையே சார்ந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும் வச.11. ஒவ்வொரு ஆயுதத்தையும் குறித்து நான் விவரிக்கவில்லை. ஆனால் ஒவ்வொன்றும் பாதுகாவலுக்கும் தாக்குதலுக்கும் ஏதுவானவை. நமது சொந்த பரிசுத்தத்தால் நாம் செயல்பட முடியாது. தேவனுடைய நீதியினால் நாம் தரிப்பிக்கப்பட வேண்டும். ஆயத்தம் என்னும் பாதரட்சை தொடுத்தவர்களாகவும் ஆவியின் பட்டயமாகிய வேத வசனத்தை எடுத்தவர்களாகவும், பொல்லாங்கன் எய்யும் அம்புகளைத் தடுக்கும் விசுவாசம் என்ற கேடயத்தைப் பிடித்தவர்களாகவும் நிற்க வேண்டும்.

தலைவர்கள் எனக் கூறப்படும் நம்மில் அனேகர் உத்தியோகபூர்வமான பரிசுத்தமுடையவர்கள் என்ற குறைவுடையவர்களாயிருக்கிறோம். தேவனில்லாமலே செய்யக்கூடிய அனேக பணிகளை சபைக்காக நிறைவேற்ற அறிந்திருக்கிறோம். சனிக்கிழமை வந்தவுடன் "நான் நாளை ஆலயத்தில் பிரசங்கிக்க வேண்டுமே. எனது வாழ்வு தேவனோடு தொடர்பற்றிருக்கிறதே. இந்த வாரம் முழுவதும் அவரோடு பேசவில்லையே. அவரோடுள்ள நெருங்கிய உறவு இல்லையே" என்று எண்ணிக் கொண்டு "ஆண்டவரே, தயவாக மன்னியும். என்னைக் கழுகி ஆயத்தப்படுத்தும்" என்று ஜெபித்து விடுகிறோம்.

தேவன் தம்முடைய இரக்கத்தினாலே உங்களை பயன்படுத்தலாம், .ஆனால் மனிதன் தேவனுடைய மகாப் பெரிய தூய்மையை அறிந்திருப்பது அவசியம். வாரம் முழுவதும் தேவனைத் தேடுவதும் சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்வதும் தேவன் நமது இருதயங்களில் தமது வார்த்தையைப் பேசிக் கொண்டுமிருந்தால் ஞாயிற்றுக் கிழமை தேவனுடைய முழுமையான நிறைவோடு ஜனங்களுக்கு முன் நிற்க முடியும்.

சர்வாயுதத்தை தரித்துக் கொண்டு அவருடைய வல்லமையைப் பெற்று நிற்கும் நாம் ஆவியில் ஜெபிக்க வேண்டும். "எந்த சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினால் ஜெபம் பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் வச.18. சகலவிதமான வேண்டுதல்கள் என்பதில் ஆண்டவரைப் புகழுவதும், பாவ அறிக்கையும், மனந்திரும்புதலும், தேவைகளுக்காகவும் மேலும் தேவராஜ்யத்திற்காகவும் ஜெபிப்பதெல்லாமே அடங்கும். கர்த்தர் கற்பித்த ஜெபத்தில் இவற்றை நாம் காண்கிறோம்.

எல்லா சமயத்திலும் ஆவியில் ஜெபிக்க வேண்டும். இதை 1 தெச.5:17-ல் இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. இது சாத்தியமா என்று கேட்க வேண்டாம். நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்த பரிசுத்த வான்கள் ஜெபத்தின் தாகத்தை உணர்ந்து எப்போதும் ஜெபித்திருக்கிறார்கள்.

எல்லா பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளுக்காக, சபைகளுக்காக, போதகர்களுக்காக, தலைவர்களுக்காக, மிஷனெறிகளுக்காக நாம் இடைவிடாது ஊக்கமாக ஜெபிக்கவேண்டும். ஜெபம் உங்கள் வாழ்விலே ஒருபோதும். ஓரங்கட்டப்படக் கூடாது. ஜெபமாகிய அஸ்திபாரத்திலிருந்துதான் உங்கள் வாழ்வு, ஊழியம் போன்ற யாவும் துளிர்விட வேண்டும்.

தொடர் தேவ பணி

ஜான் பைப்பர் என்பவர் "விசுவாசிகளின் கரத்தில் ஜெபம் சரியானபடி பயன்படுத்தப்படாத காரணம் என்ன வெனில் அவர்கள் போராட்டத்தை வீட்டுக்காரியமாக எடுத்துக் கொள்ளுகிறார்கள்" என்று ஜெபத்தின் முக்கியத்துவத்தை மேற்கோள் காட்டுகிறார். ஜெபம் என்பது ஒரு போராட்டம் என்று நீங்கள் விசுவாசிக்கும் வரை ஜெபம் எதற்காக பண்ணப்படுகிறது என்பதை அறிய முடியாது. ஜெபம் என்பது போராட்ட காலத்தில் நிகழ்த்தப்பட வேண்டிய ஒரு தேவபணி. அது சேனாதிபதியாகிய இயேசு படைவீரர்களை அழைத்து கடின பணியை ஒப்படைப்பதற்குச் சமமானது. நீங்கள் போய் கனி கொடுங்கள் என்பது அப்பணி. தளபதி நீங்கள் அதனை நிறைவேற்றும்படி எதிர்பார்க்கிறார். அதற்குரிய கருவிகளையும் அளிக்கிறார். அவைகளை நீங்கள் தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும்.

ஆனால் கிறிஸ்தவர்கள் செய்வ தென்ன? தாங்கள் போரில் ஈடுபட்டிருப்பதையே விசுவாசிப்பதை நிறுத்தி விடுகிறார்கள். எனவே அவசரம் தேவையில்லை, விழிப்பு தேவையில்லை, எச்சரிக்கை தேவையில்லையென்று நிம்மதியாகவும் செழிப்பாகவும் வாழுகிறார்கள்.

சரிசெய்து கொள்ளுங்கள்

அனைவருக்கும் போரில் வெளிச்சமாயிருப்பது கர்த்தர். இது பிள்ளைகள், மாணவர், பெரியோர் யாவருடைய ஆத்துமாக்களுக்கும் பொருத்தமானது. நீங்கள் உங்களைச் சரிசெய்து கொள்ள வேண்டும். முன்பு ஜெபித்ததைக் காட்டிலும் அதிகமாகவும் அசாதாரணமாகவும் ஐக்கியமாகவும் ஜெபிக்க வேண்டும்.

பிதாவே, உமது ஆவியானவர் இந்த வேளையிலே எங்கள் ஒவ்வொருவரோடும் செயல்படுவீராக. நாங்கள் சரிபண்ண வேண்டியதைச் சரிபண்ணுவதால் உமது ஆவியை அணைத்துப் போடாமலிருப்போமாக. உமது ராஜ்யம் வரவும் உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படும்படி நாங்கள் அசாதாரணமாகவும் இடைவிடாமலும் ஐக்கியமாக ஜெபிக்க எங்களை எழுப்பியருளும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

நீ உனது ஜனங்களுக்காக மன்றாடி ஜெபிக்க வேண்டும் என்பதை விட பெரிய வொறுப்பை தேவன் உனக்கு தரவில்லை

– டாக்டர் பாப் பியர்ஸ்

உத்தமமும் எதிர்பார்ப்புடையதுமான ஜெபத்திற்காக கர்த்தருடைய அழைப்பு

The Lords call for earnest, expectant Prayer

Rich Carmicheal

ஜெபத்தைக் குறித்த வாக்குத்தத்தங்கள்:

மத்.7:7; மத்.7:11; மாற்கு 11:22-24; யோவ. 14:12-14; யோவ. 15:7; 1 யோவ. 3:22; எபி.11:6 (மத்.6:6) 1 யோவா.5:14-15 ஆகிய வசனங்களைப் படியுங்கள். இவைகள் ஜெபத்தின் வழியாக நாம் கேட்கிறவைகளை தேவன் நிச்சயமாக செய்வார் என உறுதிப்படுத்துகின்றன.

நமது தேவன் சர்வ வல்லவர்

நமது தேவனைப் பற்றிய மகத்துவமான சத்தியங்கள் மூலம் அவர் யார் என்பதையும் அவர் எவற்றைச் செய்யக்கூடியவர் என்பதை அறியலாம். அவர் மிகப்பெரிய வல்லமையால் தமது புயத்தை நீட்டி வானத்தையும் பூமியையும் படைத்தார். அவரால் செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்று மில்லை எரே.32:17. நமது ஜெபங்கள் மூலம் நாம் ஏறெடுக்கும் விண்ணப்பங்களுக்கு அவர் பதில் தருவது மட்டுமல்ல "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவர்" எபேசி.3:20. நமது தேவன் வல்லமையுள்ளவராயிருப்பதால் நமது ஜெபமும் வல்லமையுள்ளது. 'எதிர்பார்க்க முடியாத வைகளை எதிர்பாருங்கள்' என்று ஆன்ட்ரூ மூர்ரே நம்மை உற்சாகப்படுத்துகிறார். மேலும் அவர் அதிசயங்களை செய்கிறவரும் உங்களில் அவர் இயற்கைக்கு மேலானதும் தெய்வீகமானதுமான செயல்களைச் செய்யவும் அதை நிரூபிக்கவும் கூடிய தேவன் என்பதனை அறிந்து அவரை ஆராதிக்கவும் நம்மைத் தூண்டுகிறார்.

இவைகளை மனதில் கொண்டவர்களாக நாம் மிகுந்த விசுவாசத்தோடும் எதிர்பார்ப்போடும் ஜெபிக்க வேண்டும். அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக முழு விசுவாசத்துடன் அவர்கள் இரட்சிப்புக்காக ஜெபிக்க வேண்டும். சுகவீனமாயிருப்பவர்கள் முழு சுகம் பெற எதிர்பார்ப்புடன் ஜெபிக்க வேண்டும். அதுபோலவே ஒடுக்கப்பட்டவர்கள் அவரால் விடுவிக்கப்படவும், வழி தவறியவர்கள் மனந்திரும்பவும், தேவையுள்ளவர்களின் தேவைகள் சந்திக்கப்படவும் முழுமையாக எதிர்பார்ப்புடன் ஜெபிக்க வேண்டும். பின்வாங்கிப் போனவர்கள் எழுப்புதலடையவும், அந்தகாரத்திலிருப்பவர்கள் மேல் ஒளியை அனுப்பவும், சிறையிலிருப்பவர்களை அவர் விடுவிக்கவும் எதிர்பார்ப்புடன் ஜெபிக்க வேண்டும். கவலையிலிருப்பவர்களும்,

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

கலக்கமுற்றிருப்பவர்களும் அவரால் ஆறுதலையும் சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள முழுவதும் அவரை எதிர்பார்த்து ஜெபிக்க வேண்டும்.

ஜெபத்தின் வல்லமையை குறித்த ஒரு சாட்சி

'இதயக்கதறல்' என்ற ஒரு மாநாட்டில் சீனா, ஈரான், இந்தியா போன்ற இடங்களிலிருந்து வந்த ஊழிய நடத்துனர்களுடன் Sammy Tippit நடத்திய நேர்முகப் பேட்டி மூலமாக அந்த இடங்களில் பாடுகளின் மத்தியிலும் தேவன் ஆச்சரியமாக கிரியை நடப்பிப்பதைக் குறித்து அறியமுடிகிறது. பஞ்சாபில் (இந்தியா) தேவபணி செய்யும் போதகர் **ஜாஸ்லி சிந்து** என்பவரின் வாழ்வில் ஜெபத்தின் மூலமாக தேவன் நிறைவேற்றிய செயல்களை அவர் கூறக் கேட்போம்.

2020-ம் ஆண்டில் எல்லாப் பணிகளும் முடக்கப்பட்டிருந்த நாட்களிலும் நூற்றுக்கு அதிகமானபேர் பிற சமுதாயங்களிலிருந்து மனந்திரும்பி ஆண்டவரை ஏற்றுக்கொண்டு ஸ்தல சபைகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

நாங்கள் சுவிசேஷப்பணி செய்யும் போது ஜனங்கள் தங்கள் இடங்களில் திரும்பிச்சென்று தங்கள் சாட்சியினை தங்கள் உறவினருக்கும் நண்பர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப் போதிக்கிறோம். எங்கள் அங்கத்தினர் தங்கள் குடும்பத்திலுள்ள மக்களின் பட்டியல், ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாதவர்களின் பட்டியல் ஆகியவற்றை தயாரித்து அவர்களுக்காக ஜெபிப்பார்கள். சமயம் வாய்க்கும் போது அவர்களிடம் சென்று சுவிசேஷத்தை அறிவிப்பார்கள்.

நான் முக்கியமாகச் சொல்ல வேண்டியது ஜெபத்தின் வல்லமையும் அதன் விளைவுகளுமாகும். மக்கள் வந்து நாங்கள் உறவினருக்காக ஜெபித்ததையும், வியாதியஸ்தருக்காகவும், பிசாசு பிடித்தவர்களுக்காகவும் ஜெபித்ததையும் தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாயிருந்தவர்களுக்காக ஜெபித்ததையும் அவர்கள் விடுதலை பெற்றதையும் குறித்து நூற்றுக்கணக்கான சாட்சிகளை அறிவித்தார்கள். சபை ஜனங்களின் ஜெபத்தின் மூலமாக தேவன் வல்லமையுடனும் கிருபையுடனும் மக்களை விடுவிக்கவும், சுகப்படுத்தவும் இரட்சிக்கவும் செய்தார். அவர் நம்முடைய தேவன்தானே.

மனந்திரும்புதலும் ஜெபமும்

சிலவேளைகளில் நமது ஜெபங்கள் வல்லமையற்றுப்போகக் காரணம் நமது தவறான நோக்கமாகும். "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" யாக்.4:3. இன்னும் சில வேளைகளில் "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினால், உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" யாக். 4:2. F.B. மேயர் என்ற பக்தன் "மிகப்பெரிய துக்கமான காரியம் பதில் தரப்படாத ஜெபமல்ல, ஆனால் ஏறெடுக்கப்படாத ஜெபம்" என்கிறார்.

நமது வாழ்வின் பாவங்களாலும், நமது மன்னியாமையாலும் நாம் ஜெபத்திற்குப் பதிலைப் பெற்றுக் கொள்ளாமலிருக்கலாம். ஏசா.59:1,2; சங்.86:18; எரே.11:9-14; மாற்கு 11:25,26 ஆகிய வசனங்களைப் படியுங்கள். நமது வாழ்வில் இவை காரணமாயிருந்தால் ஆண்டவர் நம்மை மனந்திரும்பவும் அவரோடுள்ள உறவைப் புதுப்பித்துக் கொள்ளவும் அழைப்பதற்காக நன்றி சொல்வோம். நாம் பாவத்தை விட்டு விலகவும் முழுவதுமாக அவரிடம் திரும்பவும் அவர் நம்மை அழைத்துக் கொண்டிருக்கிறார். அப்படி நாம் செய்யும்போது அவர் நம்மை மன்னித்து நமது ஜெபங்கள் மூலமாக வல்லமையான செயல்களை நடப்பிக்க வாக்குப் பண்ணுகிறார். அவர் "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு சுகமத்தைக் கொடுப்பேன்" 2 நாளா.7:14 என்று கூறியிருக்கிறார்.

ஜெபத்திற்குப் புதிய அர்ப்பணம்

அற்புதமான உண்மை என்ன வெனில் நாம் அவரில் நிலைத்திருந்து அவருடைய சித்தப்படி ஆவியானவரின் ஏவுதலின்படி அவருடைய மகிமைக்காக, அவருடைய நாமத்தில் உத்தமமாகவும், விடாப்பிடியாகவும் விசுவாசத்தோடும் அவரில் நம்பிக்கையுடனும் ஜெபித்தால் நமது ஜெபங்களின் மூலம் அவர் மேலான காரியங்களைச் செய்வதை நாம் எதிர்பார்க்க முடியும். நமது வாழ்விலும் பிறருடைய வாழ்விலும் ஆவிக்குரிய வெற்றியைப் பெறுவோம். அவருடைய ராஜ்யம் வருவதையும் அவருடைய சித்தம் பரத்தில் செய்யப்படுவதுபோல இப்பூமியில் செய்யப்படுவதையும் காணலாம். நமது குடும்ப அங்கத்தினரும் அயலகத்தாரும் கிறிஸ்துவிடம் வருவார்கள். நமது சபையிலும் சமுதாயத்திலும் பெரிய உயிர் மீட்சி ஏற்படுவதையும் அது உலகம் முழுவதும் பரபுவதையும் காண்போம். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது யாக்.5:16.

நாமும் ஜெபத்தின் மூலம் தேவனை நெருங்குவோமா? எபேசி. 6:18-ன் படி எந்தச் சமயத்திலும் சகலவித மான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணுகிறோமா? அவர் வல்லமையுடன் நமது ஜெபங்கள் மூலம் கிரியை செய்வார். ஜெபிப்பதற்காக சமயம் செலவு பண்ணவும் நாம் ஆண்டவர் கற்பிப்பவைகளுக்குக் கீழ்ப்படியவும் தேவன் கிருபை செய்வாராக.

மன்றாட்டு வீரரான ரீஸ் ஹோவெல்ஸ்

Rees Howells : Intercessor

மிஷனெறியாகவும் கல்லூரி நிறுவனராகவும் இருந்த ஆரம்ப நாட்கள் :

சரித்திரத்தில் புகழ்பெற்ற மன்றாட்டு வீரரான ரீஸ் ஹோவெல்ஸ் 1879-1950-களில் வாழ்ந்தவர். வாலிப நாட்களில் இரட்சிக்கப்பட்ட இவர் தூய ஆவியால் நிரப்பப்படுவதற்கு காரணமாயிருந்தது வேல்ஸ் எழுப்புதல் என்பது உண்மை. அந்நாட்களிலிருந்தே தேவன் அவருக்குள் மன்றாடும் வாழ்வை உருவாக்கினார். சில ஆண்டுகள் நிலக்கரிச் சுரங்கத்தில் பணி செய்த பின்பு பிரசங்கிக்கும்படி தேவன் அவரை அழைத்தார். சிற்றாலயம் சிற்றாலயமாகத் தனது சொந்த வேல்ஸ் நாட்டில் பிரயாணம் பண்ணி சுவிசேஷத்தை அறிவித்து ஆத்தும ஆதாயம் செய்தார்.

திருமணத்திற்குப் பின்பு மனைவியோடு தூரமான இடங்களைக் குறித்து ஜெபித்தபோது, தேவன் அத்தம்பதியினரை ஆப்ரிக்காவுக்கு மிஷனெறிகளாகச் செல்ல வழிநடத்தினார். அங்கு அவர்களது ஊழியம் எழுப்புதல்களால் ஆசீர்வதிக்கப்பட்டது. அங்கு ஆயிரக்கணக்கான மைல் தூரங்களை அவர்கள் கடந்து ஒரு மிஷன் நிலையத்திலிருந்து அடுத்த நிலையங்களுக்குக் கடந்து சென்றார்கள். ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் பாவ அறிக்கை செய்து தங்கள் பாவங்களை அகற்றி எழுப்புதலடைந்தார்கள். எண்ணற்ற பாவிகள் மனமாற்றமடைந்தனர்.

இவ்வாறு ஆறு ஆண்டுகள் இவர்கள் ஆப்பிரிக்காவில் உழைத்தனர். பின்பு பிரிட்டன் வந்தபோது சேவை செய்ய விரும்பிய வாலிபர்களுக்கு ஒரு பயிற்சி கல்லூரியை ஸ்தாபிக்க வழி நடத்தப்பட்டார். இது ஒரு மிகப்பெரிய திட்டம். பல நாட்கள் ஜெபித்த பின்னரே இதைச் செய்ய முடிந்தது. இரண்டே ஷில்லிங் கையில் இருந்த நிலையில் ஸ்வான்சீ என்ற இடத்தில் கல்லூரியின் தேவைக்கான வீடுகட்ட ஒரு பெரிய இடத்தை வாங்க முடிந்தது. பல சோதனைகளின் மத்தியில் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் ஆறு ஆசிரியர்களும் 30 மாணவர்களும் கிடைத்தனர். போதனை இலவசமாக அளிக்கப்பட்டது. குறைந்த விலையில் உபகரணங்கள் கிடைத்தன. தேவைக்கு ஏற்ப பொருளாதார உதவியும் கிடைத்தது.

ஆறு ஆண்டுகளுக்குப் பின் இன்னொரு இடத்தில் 17 ஏக்கர் நிலம் வாங்க ஆண்டவர் உதவிசெய்தார். எனவே இருமடங்கு மாணவர்கள் கற்றுக்கொள்ள இடவசதி ஏற்பட்டது. ஆனால் இது கைகூடிவர அதிக விசுவாசமும் மன்றாட்டும் தேவையாயிருந்தது.

மேற்கூறிய நிலம் வாங்குவதற்கான பணத்தைக் கட்டி முடிப்பதற்குள் தேவன் இன்னொரு திட்டத்தை அளித்தார். அதாவது 200 பேர் உட்காரக் கூடிய ஒரு சிற்றாலயம் 400 பேர் அமரக் கூடிய ஒரு மாநாட்டு அறையும் அதோடு 150 மாணவர்கள் மாணவிகள் தங்கக் கூடிய விடுதியும் கட்டப்பட வேண்டும் என்பதாகும்.

இவைகள் கட்டி முடிக்கப்படும் வேளையில் மறுபடியும் அவர்களது

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

உள்ளத்தில் மிஷனெறிகளின் பிள்ளைகளுக்கான ஒரு இல்லத்தைக் கட்ட தேவன் தூண்டினார். எனவே அதிக விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் பிள்ளைகள் படிக்க பள்ளியும், தங்குமிடமும், வகுப்பறைகளும் விளையாட்டு அரங்கமும் கட்டித் தீர்க்கப்பட்டன. ஆனால் இவற்றை ஆரம்பிக்கும்போது அவர்களிடம் பொருளாதாரம் இல்லாதிருந்தது.

இரண்டே ஷில்லிங்குடன் ஆரம்பித்த கல்லூரிப்பணிக்கு தேவன் பதினான்கு ஆண்டுகளில் 125,000 பவுண்ட் கொடுத்து ஆசீர்வதித்தார். இந்நாட்களில் மன அழுத்தங்களும் பொருளாதார நெருக்கடிகளுமிருந்ததுண்டு. ஆயினும் தேவன் தம்மை உண்மையாய் தேடின மக்கள் குறைவு அடைய செய்யவில்லை. ஏனெனில் அவர்கள் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் அவருடைய வாக்குத்தத் தங்களைப் பிடித்துக் கொண்டார்கள். தேவன் உத்தமர் என்பதற்கு அவர்கள் சாட்சியாயிருந்தனர். அவருடைய சத்தத்தைக் கேட்டு விசுவாசத்தோடு காலடி எடுத்து வைக்கும்போது விமரிசனங்களும் எதிரான சூழ்நிலைகளும் நம்மை ஒன்றும் செய்யக்கூடாது.

சகல சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷம்

சகல சிருஷ்டிகளும் சுவிசேஷத்தை அறிய வேண்டும் என்பது அவரது பாரமாயிருந்தது. இதனை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அவர் அறிவுறுத்தினார். நீண்ட காலமாகவே புறஜாதிகளும், சொந்த ஜனங்களும் உலகத்தின் கடைசி பகுதி வரையிலுமுள்ள மக்கள் தேவனுக்குச் சொந்தமாக வேண்டும் என்று அவர் ஜெபித்துக் கொண்டிருந்தார். உலகமே அவருடைய சபை என்று அவர் கருதினார். கல்லூரியில் பணிபுரிந்த அனைவருமே அறுவடைக்காக தேவன் வேலையாட்களை அனுப்பும்படி ஜெபித்தனர். அவர்களும் தங்களை ஆயத்தப்படுத்தி ஜெபித்தனர்.

உலகம் முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்ற பாரம் நிறைந்தவராய் ஹோவெல்ஸ் தேசங்களுக்காய் ஜெபிக்க ஆரம்பித்தார். சுவிசேஷத்திற்குத் தடைகள் நீங்க அவர் ஜெபித்தார். 1936-ம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்தபோது ஊக்கமான ஜெபம் ஆரம்பிக்கப்பட்டது. 3 வாரங்கள் உபவாச ஜெபம் நடைபெற்றது. சுவிசேஷத்திற்கு எதிரான விசைகள் நீங்க அதிகமான மன்றாட்டு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. உலகம் அனைத்தும் சுவிசேஷம் அறிவிக்கப்படுவது தேவனுக்கு முதன்மையானது. அதற்கு அவரோடு இணைந்து விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் உழைக்கிற வேலையாட்கள் வேண்டுமல்லவா?

போர்

போர் அதிகரிக்க அதிகரிக்கக் கல்லூரியில் மன்றாட்டு ஜெபமும் அதிகரித்தது. யுத்தக்களத்தின் முன்னிலையில் போராடுவது போல ஜெபப் போராட்டத்திலும் அனேகர் ஈடுபட்டனர். கர்த்தருக்காகப் போராடுவதற்காக தங்கள் சுகங்களை மறந்தனர்.

கல்லூரியில் ஜெபித்துக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் தூய ஆவியானவர் வல்லமையாக ஊற்றப்பட்டார். இதுவரை தாங்கள் அறியாத விதமாக தங்களை பரிசுத்த பாத்திரங்களாக அர்ப்பணித்துக் கொண்டவர்களை ஆவியானவர் ஆட்கொண்டார். அவர்கள் தங்களை ஜீவபலியாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தனர். அவர்கள் உலக சுவிசேஷ பணிக்காகப் பிரித்தெடுக்கப்பட்டனர்.

இரவும் பகலும் ஜெபமும் துதியும் ஏறெடுக்கப்பட்டன. விசுவாசம் அவர்களில் பெருகியது. வெற்றியின் செய்தி அறிவிக்கப்பட்ட போது அதிகமான துதி ஏறெடுக்கப்பட்டது.

பிரிட்டன் ஆயத்தமில்லாமலிருந்த போது ஒருமுறை ஹிட்லர் அதனை தாக்க ஆயத்தமானான். 'ஆண்டவரே ஹிட்லரை தடுத்து நிறுத்தும்' என்று இடைவிடாத மன்றாட்டு ஏறெடுக்கப்பட்டது. ஏதோ காரணத்தால் ஹிட்லர் தானாகவே மக்களுக்கு இசைந்து முற்று கையை நிறுத்திவிட்டான். தேவன் தமது பிள்ளைகளின் சத்தத்தைக் கேட்டார்.

பின்பு பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் 1939-ல் செப்டம்பரில் யுத்தம் பிரகடனமானபோது மேற்கூறிய கல்லூரியில் ஒவ்வொரு நாளும் இரவு 7 முதல் 12 வரையிலும் காலையில் ஒரு மணி நேரம் அடிக்கடி நடுப்பகலிலும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. ஜெபம் ஏறெடுக்கப்படாத நாட்களில்லை. மேலும் சில நாட்கள் முழுவதும் ஜெபம் தொடர்ந்தது. சில வேளைகளில் பிரிட்டன் படை தோல்வியை நெருங்குவது போல் தோன்றியது. அப்போதெல்லாம் அவர்கள் தேவன் விசுவாசத்தை கனப்படுத்துகிறவர் என்ற நோக்கத்துடன் தேவனையும் அவரது வசனத்தையுமே நோக்கினர். தோற்றங்களை அவர்கள் நோக்கவில்லை. வேத வசனம் எங்கும் பரவ வேண்டும் என்ற எண்ணத்தோடு சுயாதீனத்திற்காக ஜெபித்தனர்.

டனகிர்க் என்ற இடத்தில் நடந்த அற்புதம்

1940-ம் ஆண்டு மே 21-ம் நாள் பிரிட்டனுக்கு மிகவும் இருளான நாளாயிருந்தது. பிரிட்டன் முற்றுகையிடப்படுவது உறுதியாகிவிட்டது. இக்கட்டான நிலையில் பிரிட்டன் படைகள் பின்வாங்கிக் கொண்டிருந்தன. கல்லூரி மன்றாட்டு வீரர்கள் மற்றும் அநேகர் பிரிட்டிஷ் படைகளைப் பாதுகாக்கும்படி தீவிரமாக ஜெபித்துக் கொண்டிருந்தனர். இன்று **டன்கிர்க்** என்ற இடத்தில் நடந்த அற்புதம் சரித்திரமாகியுள்ளது. தலைவர்களும் இது தேவனுடைய தலையீடு என்று ஒப்புக் கொள்கின்றனர். ஏனெனில் கடல் அமைதியாகி சிறிய படகும் படைவீரர்களை பிரிட்டனுக்கு திருப்பிக் கொண்டு வந்து சேரவும் இவ்வாறு சரீர ஆத்மீக அழிவுக்கு அவர்கள் தப்பிக் கொள்ளவும் ஜெபம் ஏதுவாயிற்று.

சில மாதங்களுக்குப் பிறகு பிரிட்டன் மேல் பயங்கர விமான தாக்குதலுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அப்போது தேவன் என்னிடம் தெளிவாக **ஹோவெல்**, எந்த ஒரு குண்டும் கல்லூரி வளாகத்தின்மேல் வராது என்றார். தேவன் தந்த உறுதியின்படி இரவில் போடப்பட்ட குண்டுகளாலும் சங்கு ஒலிகளாலும் எந்த அமைதிக் குறைவும் வளாகத்தில் ஏற்படவில்லை.

தேசிய அளவிலான ஜெபம் நடத்தப்பட்ட பின்பு ஹோவெல்ஸ் இப்படிக் கூறி, விசுவாச வாழ்வில் மக்கள் நிலைத்திருக்க வேண்டிக் கொண்டார். "விசுவாசமில்லாமல் தேவன் நமது யுத்தத்தை நடத்தித் தர முடியாது". தேசிய அளவிலான ஜெபம் நடந்த சில நாட்களுக்குப் பின்பு விமானப்போரில் மக்கள் ஈடுபட்டிருந்தபோது ஜெர்மன் படை வெற்றி பெறும் நிலைக்கு வந்து விட்டது. ஆனால் சில நிமிடங்களில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. பறந்து குண்டுகளை வீசிக் கொண்டிருந்த ஜெர்மன் வீரர்கள் ஆச்சரியப்படும்விதமாக தங்கள் நாட்டிற்குப் பறந்து சென்றுவிட்டனர். பிரிட்டன் வெற்றி பெற்றது.

ஒவ்வொரு போர் காலத்திலும் கல்லூரியின் மன்றாட்டு ஜெபம் நிறுத்தப்படவில்லை. எனவே வெற்றிக்குப் பின்னால் வெற்றியை பிரிட்டன் பெற்றது. அதற்குப் பின்னால் கிரியை செய்தது விசுவாசம். இதற்கு நோக்கமாயிருந்தது சுவிசேஷம் எங்கும் அறிவிக்கப்பட வேண்டும் என்பதும் ஆண்டவராகிய இயேசுவின் வருகைக்கு மக்கள் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும் என்பதுமாகும்.

இன்று உலகம் இக்கட்டான நிலையிலிருந்து கொண்டிருக்கிறது. ஆனால் தேவனுடைய பாதத்தில் காத்திருந்து அவருடைய வழிநடத்துதலுக்காகவும் அவருடைய திட்டங்கள் நோக்கங்கள் நிறைவேறுவதற்காகவும் மன்றாடுவது யார்? விசுவாசமுள்ள போராட்ட ஜெபம் திசையை மாற்றி தேவதிட்டம் நிறைவேறி வெற்றி பெற வழிவகுக்கும்.

(8-ம் பக்க தொடர்ச்சி)

எத்திசையும் தொனிக்கின்றதே
எங்கள் மனம் திகைக்கின்றதே
அப்பா உம் அன்பு பெரிதே

தேவன் உங்களை இயேசு கிறிஸ்துவைப் போல ஜெபிக்கிற ஜெப வீரராக மாற்றுவாராக.

ஆண்டவருக்குச் சித்தமானால் அடுத்த மாதம், 'ஆண்டவர் இயேசு பாராட்டின விதவை' பற்றி எழுதுவேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக.

பத்திரிகை பதிவு எண்ணோடு, உங்கள் வாட்ஸ்அப் நம்பரை எங்கள் மொபைல் 9489740295 எண்ணுக்கு தெரிவியுங்கள். உங்களுக்காக நான் தினந்தோறும் ஜெபிக்க ஆவலாயிருக்கிறேன்.

உங்கள் சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
அலுவலகம்: **95432 21008** (WESLEY DEVADASON)

ஊழியரின் முதல் தேவை ஜெபம்!
இரண்டாவது தேவை ஜெபம்!
மூன்றாவது தேவை ஜெபம்!
ஆகவே அன்பானவர்களே ஜெபியுங்கள்.
– எட்வர்ட்பேசன்

(2-ம் பக்க தொடர்ச்சி)

ஆனாலும் அவர்கள் பத்திரிகை அனுப்பவில்லை" என்று பராது சொல்ல வேண்டியது வரும்.

இரண்டாவதாக, பெரும் பாலான தூதன் வாசகர் நான் சொல் வதை(எழுதுவதை) கேட்பதில்லை. ஒரு தபால் அட்டையில் எழுதப்பட்டதை கீழே அச்சிடுகிறேன் :

கர்த்தருக்குள் பிரியமான பாஸ்டர் அவர்களுக்கு,

நான் "வருகையின் தூதன்" பத்திரிகைக்கு ரூ.100/- M.O.-ல் அனுப்பி யுள்ளேன் (Date : 22.05.2021) தொடர்ந்து பத்திரிகை அனுப்பவும். எனக்காகவும் என் குடும்பத்தினர் அனைவருக்காகவும் ஜெபிக்க வேண்டுகிறேன்.

* * *

2022-ம் ஆண்டு மாதா மாதம் நாங்கள் உங்களுக்கு பத்திரிகை அனுப்ப 2-ம் பக்கம் மேல் பகுதியில் அச்சிட்டிருப்பதை அப்படியே செய்யுங்கள்.

LORD, teach us to pray
ஆண்டவரே, ஜெபம் பண்ண எங்களுக்குப் போதிக்க வேண்டும்
லூக்கா 11:1

(இந்த கட்டுரையை ஜெபத்தோடு, தனியான ஒரு இடத்தில், உங்கள் வேத புத்தகத்தோடு வாசியுங்கள்)

"எழுப்புதல் தாமதிப்பது ஏன்?" என்ற புஸ்தகத்திலிருந்து இரண்டு சிறிய பகுதிகளை முதலாவது அச்சிடுகிறேன் :

"பிரசங்கம் ஒருவேளை மனிதரை மட்டும் அசைக்கும்; ஜெபமோ தேவனை அசைக்கிறது. பிரசங்கம் நேரத்தைக் கடத்துகிறது; ஜெபமோ நித்தியத்தைப் பாதிக்கிறது. பிரசங்க பீடத்தில் நமது தாலந்துகளை வெளிக் காட்டலாம்; ஜெப அறையிலோ அதற்கு இடமேயில்லை".

"செத்த சபையினர், செத்த பிரசங்கங்கள், செத்த ஊழியர் - இதுவே இன்றைய சோக கதை".

* * *

"தம் ஜனம் ஜெபிக்கும்போது தான் தேவனுக்கு அதிகப் பொறுமை தேவையாயிருக்கிறது. அவர் என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டுமென்று நாம் அவருக்குச் சொல்லுகிறோம். நியாயந்தீர்த்தலும் பாராட்டுதலும் ஜெபத்தில்தான். சுருங்கக் கூறின், ஜெபிக்கிறோம் என்று சொல்லும்போது ஜெபிப்பதைத் தவிர மற்றெல்லாவற்றையும் நாம் செய்கி றோம். வேதாகமப் பள்ளி எதுவும் இக்கலையை நமக்குக் கற்றுத்தர இயலாது. தனது பாடப் பயிற்சித் திட்டத்தில் ஜெபத்திற்கு என்று ஒரு தனிப்பகுதி அளித்துள்ள வேத கலா சாலை எது? நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமானது வேதத்தில் ஜெபத்தைப் பற்றி எழுதப் பட்டிருப்பதே, ஆனால் இது எங்கே கற்பிக்கப்படுகிறது? கடைசிக் குட்டை யும் நாம் உடைத்துவிட்டு, நம்முடைய தலைவர்களிலும் ஆசிரியர்களிலும் பலர் ஜெபிப்பதில்லை, கண்ணீர் சிந்துவ தில்லை யென்று உரக்கக் கூறுவோம். தாங்களே அறியாததை அவர்கள் எப்படி கற்பிக்க முடியுமா?

விசுவாசிகளை ஜெபிக்க வைக்கக் கூடிய மனிதனே இதுவரை உலகம் காணா மிகப்பெரிய எழுப்புதலை தேவனுடைய உதவியால் கொண்டு வருவான்.

* * *

அப்போஸ்தலனாகிய பவுல் இதையே, "நமக்கு ஜெபிக்கத் தெரி யாது" என்று எழுதுகிறார். "அந்தப் படியே ஆவியானவரும் நமது பலவீனங் களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டிய தின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெரு மூச்சுகளோடு நமக்காக வேண்டு தல் செய்கிறார்" ரோமர்.8:26. **இந்த ஆவியானவரை பெற்றிருக்கிறீர்களா?** அப்.2:4; 4:31; 8:15-17.

இந்த செய்தியின் தலைப்பை விரிவாக எழுதுகிறேன். "அவர் ஒரு இடத்தில் ஜெபம் பண்ணி முடித்த பின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம் பண்ணப் போதித்தது போல, நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும் என்றான்" லூக்கா 11:1. பிரசங்கிக்க போதியும், ஊழியம் செய்ய போதியும், அற்புதங்களைச் செய்யக் கற்றுத்தாரும் என்று கேட்கா மல், **"ஜெபம் பண்ண போதியும்"** என்றே கேட் டான். இதன் இரகசியம் என்ன? **வெற்றி யுள்ள கிறிஸ்தவ ஊழியம் செய்ய, முதலாவது நாம் ஜெபிக்க வேண்டும், இரண்டாவது நாம் ஜெபிக்க வேண்டும், மூன்றாவது நாம் ஜெபிக்க வேண்டும்.**

ஜெபம் செய்கிறவன் பாவம் செய்யமாட் டான், பாவம் செய்கிறவன் ஜெபம் செய்யமாட்டான்.

அருமை ஆண்டவர் இயேசு வின் ஜெப வாழ்க்கையிலிருந்து 7 முக்கிய குறிப்புகளை தியானிப்போம்.

I. தனி ஜெபம்

"அவரோ வனாந்திரத்தில் தனித்துப் போய், ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்" **லூக்கா.5:16.**

நான் இரட்சிக்கப்பட்ட நாட் களில் உற்சாகமான ஆவிக்குரிய வாழ்க்கை வாழ அறியாதிருந்தேன். அப்பொழுது தேவ மனிதர் ஒருவர் எனக்கு இவ்வாறு ஆலோசனை கூறி கடிதம் எழுதியிருந்தார் :

"Get up early in the morning and spend two hours in prayer then you will see the difference in your life"

அதிகாலையில் எழுந்து இரண்டு மணி நேரம் தேவனோடு செலவிடு, அப் பொழுது உன் வாழ்க்கையில் மாபெரும் மாறுதலை காண்பாய்.

1. ஆபிரகாம் வேதபாகம் : ஆதி.15:22-23

"அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம் விட்டுச் சோதோமை நோக் கிப் போனார்கள்; **ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்".**

"but Abraham stood yet before the LORD"

2. யாக்கோபு வேதபாகம் : ஆதி.32:22-29

"யாக்கோபு பிந்தித் தனித்திருந் தான்".

3. மோசே வேதபாகம் : யாத்.32:11-32

அப்படியே மோசே கர்த்தரிடத் திற்குத் திரும்பிப் போய் : ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள்.

ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்தி லிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்.

4. எஸ்றா வேதபாகம் : எஸ்றா 9:5-10:1

எஸ்றா இப்படி விண்ணப்பம் பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்து கிடக்கையில், இஸ்ர வேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளை களுமான மகாபெரிய சபை அவனிடத் தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழுதார்கள்.

5. நெகேமியா வேதபாகம்: நெகேமியா 1:1-11

இந்த வார்த்தைகளைக் கேட்ட போது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி :

உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும் பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, இஸ்ரவேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோத மாகச் செய்த பாவங்களை அறிக்கை யிடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக.

6. எஸ்தர் வேதபாகம் : எஸ்தர் 8-ம் அதிகாரம்

பின்னும் எஸ்தர் ராஜசமூகத்தில் பேசி, அவன் பாதங்களில் விழுந்து அழுது,

என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக் கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? என்றாள்.

For how can I endure to see the evil that shall come unto my people? or how can I endure to see the destruction of my Kindred?

7. எசேக்கியேல் வேதபாகம் : எசேக்.9-ம் அதிகாரம்

அவர்கள் வெட்டிக்கொண்டு போகையில் நான் மாத்திரம் தனித்து, முகங்குப்புற விழுந்து : ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் எருசலேமின் மேல் உமது உக்கிரத்தை ஊற்றுகையில் இஸ்ரவேலின் மீதியானவர்களை யெல்லாம் அழிப்பீரோ என்று முறை யிட்டேன்.

II. இரா முழுவதும் ஜெபம்

"அந்நாட்களிலே, அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்" **லூக்கா 6:13.**

"இரா முழுவதும் ஜெபம்" என்பது நாம் நடத்தும் முழு இரவு ஜெபம் போன்றது அல்ல. நம்முடைய

(7-ம் பக்கம் பார்க்க)

அதிகாலையில் தேவனைத் தேடி காத்திருந்து ஜெபிப்பவர்கள் அந்த நாள் முழுவதும் தங்கள் வாழ்வில் தேவ பிரசன்னத்தை உணர்வார்கள்.
- ஜாண் பன்யன்

(6-ம் பக்க தொடர்ச்சி)

முழு இரவு ஜெபங்களில் பாடுகிறோம், பிரசங்கிக்கிறோம், பிறகு ஜெபக் குறிப்பு களுக்காக ஜெபிக்கிறோம். ஆனால் இயேசு கிறிஸ்து '**இராமுழுவதும்**' ஜெபித் ததை புரிந்துகொள்வதற்காக சில வேதாகம புருஷரையும், சில சரித்திர புருஷரையும் கீழே எழுதுகிறேன்.

1. சாமுவேல்

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை சாமுவேலுக்கு உண்டாகி, அவர் சொன்னது :

நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னை விட்டுத் திரும்பி, என் வார்த்தை களை நிறைவேற்றாமற் போனான் என்றார்; அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, **இராமுழுதும்** கர்த்தரை நோக்கி கூப்பிட்டான் **1 சாமுவேல் 15:10,11.**

2. தாவீது

அப்பொழுது கர்த்தர் உரியா வின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண் பிள்ளையை அடித்தார்; அது வியாதிப் பட்டுக் கேவலமாயிருந்தது.

அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காகத் தேவனிடத்தில் பிரார்த் தனை பண்ணி, உபவாசித்து, உள்ளே போய், **இராமுழுதும்** தரையிலே கிடந்தான் **2 சாமுவேல் 12:15, 16.**

3. மோசே

கர்த்தரைக் கோபப்படுத்து வதற்கு நீங்கள் அவருடைய சமூகத்தில் பொல்லாப்புச் **செய்து நடப்பித்த** உங்க ளுடைய சகல பாவங்கள் நிமித்தமும் நான் கர்த்தருக்கு முன்பாக முன் போல **இரவும் பகலும்** நாற்பது நாள் விழுந்து கிடந்தேன்; நான் அப்பம் புசிக்கவு மில்லை, தண்ணீர் குடிக்கவுமில்லை.

கர்த்தர் உங்களை அழிக்கும்படி உங்கள் மேல் கொண்டிருந்த கோபத்திற் கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன்; கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட் டைக் கேட்டார் **உபாகமம் 9:18,19.**

1. 'எழுப்புதல் தொனி' பத்திரிகை ஆசிரியர்

இவர் தன்னுடைய பத்திரிகை யில் ஒரு விசை இவ்வாறு எழுதியிருந் தார் : "நான் ஜெபிக்கிறதற்காக இரவு 8.00 மணியளவில் காட்டிற்குச் சென்றால், திரும்ப வரும் போது பொழுது விடிகிறதினால் கிராமத்து ஜனங்கள் தங்கள் வீட்டின் முன்புறத்தி லுள்ள முற்றத்தை பெருக்கி தண்ணீர் தெளிப்பார்கள". அல்லேலூயா, இது தான் உண்மையாய் முழு இரவும் ஜெபிப்பது ஆகும்.

2. 'வருகையின் தூதன்' பத்திரிகை ஆசிரியர்

காலஞ்சென்ற எனது தகப்ப னார் **S.தேவதாசன்** (13.08.1905-13.11.2005) முன்னாள் **வருகையின் தூதன்** ஆசிரியர் (1955 - 1999) முழு இரவும் எழுப்புதலுக்காக ஜெபிப்பதை அடியேன் அறிவேன்.

3. எனது நண்பர்

இஸ்லாமியர் மத்தியில் அதிக மாக ஊழியம் செய்த இஸ்லாமியரான இவர் எங்கள் இல்லத்தில் சில நாட்கள் தங்கியிருக்கிறார். சில வேளைகளில் நாகர்கோவில் பட்டணத்தில் வசிக்கும் வயதான தாயார் வீட்டின் மாடியிலும் தங்குவார்.

அவர் இரவெல்லாம் சத்தம் போட்டு அழுவார். காலையில் அந்த அன்பு தாயாரைப் பார்த்து, ஆன்றி, நான் சீக்கிரம் செத்து போவேன் என்பாராம்.

4. ஜான் ஹைடு

ஜான் ஹைடு 1892-ம் ஆண்டு, தனது 27-வது வயதில் அமெரிக்காவி லுள்ள இல்லினோய்ஸ் பட்டணத்தி லுள்ள கார்தாகே என்ற ஊரிலிருந்து, ஒரு பிரஸ்பைடீரியன் சபை மிஷனெரி யாக பஞ்சாப் மாநிலத்திற்கு வந்தார். 4 வருடங்களாக 1896 வரை அவரது ஊழியத்தில் எந்தவொரு மாற்றமும் நிகழவில்லை.

1899-ம் ஆண்டு ஜான் ஹைடு தேவனது சமூகத்தில் **முழு இரவும்** முகங்குப்புற விழுந்து ஜெபிக்கத் தொடங்கினார். உள்ளூர் திருச்சபை களின் எழுப்புதலுக்காக, பஞ்சாப் மக்கள் கிறிஸ்துவண்டை வருவதற்காக கதறியழுது தொடர்ச்சியாக ஜெபித்து வந்தார். 1904-ம் ஆண்டு ஜான் ஹைடு ஜெபிக்கும் ஜெபக்குழுவை ஏற்படுத்தி, குழுவிலுள்ள ஒவ்வொருவரும் ஒரு நாளில் 30 நிமிடங்கள் ஜெபிக்க வேண்டும் என்ற இலக்கையும் விதித் தார். ஆண்டவர் எழுப்புதலின் அலையை அவர்கள் நடத்திய கன்வென்ஷன் கூடுகைகளில் அனுப்பத் தொடங்கினார்.

ஜெபிக்கும் ஹைடு என அழைக் கப்பட்ட ஜான் ஹைடு தனக்குள் அதிகரித்துக் கொண்டிருக்கும் அதே பாரத்துடன் ஆண்டவரை நோக்கி கதறியவராய், **ஆண்டவரே, எனக்கு ஆத்துமாக் களைத் தாரும், இல்லையேல் நான் சாகிறேன்** என்று ஜெபித்தார். அவர் தேசத்தின் பாவங்களோடு, பஞ்சாப் மக்களின் பாவங்களோடு மற்றும் பஞ்சாபிலுள்ள தேவ பிள்ளைகளின் பாவங்களோடு தன்னையும் ஒன்றுபடுத்தி, இணைத்துக் கொண்டு ஜெபித் தார். 1908-ம் ஆண்டு நடைபெற்ற வருடாந்திர கன்வென் ஷனில், ஆண்டவர் ஒரு நாளில் ஒரு ஆத்துமாவைத் தரவேண்டும் என்ற ஜெபக் குறிப்பை முன் வைத்தார். அநேகருக்கு இது ஒரு அசாத்தியமான காரியமாக தென்பட்டது. ஆனால் ஆண்டவர் அவரது ஜெபத்தைக் கேட்டு, அடுத்த ஆண்டில் 365 ஆத்துமாக்களைக் கொடுத்து, அவர்கள் ஞானஸ்நானம் எடுத்து, இயேசுவே ஆண்டவர், இரட்சகர் என வெளிப்படையாக அறிக்கையிட கிருபை செய்தார். அசாத் தியமான காரியமாக இருந்தாலும், இச்செயல் நடை பெற்றது. 2-வது வருடத்தில் 800 பேர் மனந்திரும்பி ஆண்டவரை அறிக்கையிட்டனர். நான்கு வருடத்தில், ஆண்டவர் ஒரு நாளில் 4 ஆத்துமாக்களைத் தந்தார். ஏதாவதொரு நாளில் 4 பேர் ஆண்ட வரண்டை வரவில்லையெனில், அந்த நாள் இரவில் அவரது இருதயம் மிகவும் கனத்துப் போய் தூங்க முடியாமலும், சாப்பிட முடியாமலும், 4 பேரை ஆதாயப்படுத்தி வெற்றி காணும்வரை ஜெபித்துகொண்டே இருப்பாராம். ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருந்தார்கள்.

பஞ்சாப் மாநிலத்து மக்கள் அவரை ஒருபோதும் உறங்காத மனிதன் என்றும், ஜெப அப்போஸ்தலன் என்றும் ஜெபிக்கும் ஹைடு என்றும் கூறுவார் களாம். அடிக்கடி ஜான் ஹைடு 30 நாட்கள் இரவும் பகலும் ஜெபத்தில் செலவழித்துள்ளார். ஒருமுறை ஆழ்ந்த மன்றாட்டு ஜெபத்தில் தனது முழங்காலி லேயே 36 மணி நேரங்கள் இருந்துள் ளார். கிராமங்கள் மத்தியில் அவர் செய்த ஊழியம் வெற்றிகரமாய் முடிந் துள்ளது.

5. ஜான் நாக்ஸ்

முழங்கால் யுத்தம் செய்வதிலே ஜான் நாக்ஸ் வல்லவராகத் திகழ்ந்தார். அவர் ஸ்காட்லாந்து வாசியும் கூட. ஸ்காட்லாந்தில் சீர்திருத்த சபைகள் செழித்தோங்கியபோது அதனை பொறுக்கமாட்டாத இரத்த வெறி பிடித்த கத்தோலிக்க மதவெறி கொண்ட மேரி என்பவள், ஸ்காட்லாந்து நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த, சீர்திருத்த சபைகளைச் சார்ந்த பரிசுத்தவான்களை முச்சந்தியில் வைத்து எரித்தல், சிறையிலடைத்துக் கொடுமைப்படுத்தியும் வந்தாள். அவளுடைய அடக்குமுறை நாளுக்கு நாள் அதிகரித்ததேயன்றி குறைந்த பாடில்லை. ஜான் நாக்ஸ் ஒரு ஜெபவீரர் என்பதையும், ஜெபித்து வெற்றி வாகை சூடுபவர் என்பதையும் அறிந்திருந்த மேரி, ஜான் நாக்ஸைக் குறித்து பின்வருமாறு கூறினாள்: "ஐரோப்பிய நாடுகளின் அனைத்து இராணுவமும் எனக்கெதிராக வந்தாலும் அஞ்சிடேன். நான் அஞ்சக் கூடியது ஜான் நாக்ஸின் பிரார்த்தனை களுக்கேயாகும்". "**ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும், இல்லையேல் நான் சாகிறேன்**" என்பதே அக்காலங்களில் ஜான் நாக்ஸ் ஜெபித்து வந்த ஜெபமாக இருந்தது. மேரி சீர்திருத்தச் சபையினருக்கு இழைத்து வந்த கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பிய ஜான் நாக்ஸ் உள்ளம் உடைந்தவராய் ஒரு சில சகோதரர் களை ஜெபத்திற்கு ஒன்று திரட்டி தேவனை நோக்கி விடாப்பிடியாக மன்றாடலானார். அவர்கள் ஜெபித்தனர், ஜெபித்தனர், ஜெபித்துக் கொண்டே யிருந்தனர். எதுவரை? தேவனிடத்தி லிருந்து பதில் கிடைக்கும் வரை ஜெபத்தில் போராடிக் கொண்டிருந்த ஜான் நாக்ஸுக்கு தேவனிடமிருந்து பதில் கிடைத்தவுடன் துள்ளி எழுந்து, "விடுதலை கிடைத்துவிட்டது நமக்கு" என்று வெற்றி முழக்கம் செய்யலானார். "இரத்தவெறி பிடித்த மாபாதகி மேரி திடீரென்று எதிர்பாரா வண்ணம் மரித்துவிட்டாள்; அவளுக்குப் பதிலாக சீர்திருத்தச் சபையில் பற்றும், நாட்டமும் கொண்ட எலிசபெத் இராணி ஆட்சிப் பொறுப்பில் அமரப் போகிறார்" என்ற செய்தி, குதிரை வீரர்கள் மூலமாக லண்டனிலிருந்து ஸ்காட்லாந்துக்கு எடுத்துச் செல்லப் பட்டு அது எட்டும் முன்பாகவே தேவன் தாம் செய்யப்போவதை ஜான்

(8-ம் பக்கம் பார்க்க)

அநேக பகல் இரவுகளை தரையிலே முகங்குப்புற விழுந்து அழுது கிடப்பதற்கு நான் தேவனால் அழைக்கப்பட்டிருந்தேன்
- மார்டின் லுத்தர்

(7-ம் பக்க தொடர்ச்சி)

நாக்ஸுக்கு முன்னறிவித்துவிட்டார். ஆகவேதான் அவர் ஜெபத்திலிருந்து துள்ளிக்குதித்து எழும்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார். ஜாண் நாக்ஸின் ஜெபத்தைக் கேட்டு ஸ்காட்லாந்தை மட்டுமல்ல, இங்கிலாந்தையும் தேவன் வெற்றிக்கனியாக அவருக்குத் தந்தார். சீர்திருத்தச் சபைகள் இடையூறுகளின்றி பிரிட்டனில் தழைத் தோங்கியது!

III. முகங்குப்புற விழுந்து ஜெபம் பண்ணினார் மத்தேயு 26:39

"அப்பொழுது யோசுவா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, அவனும் இஸ்ரவேலின் மூப்பரும் சாயங்காலமட்டும் கர்த்தரின் பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து, தங்கள் தலைகளின் மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு கிடந்தார்கள்" **யோசுவா 7:6-9.**

"அவர்கள் வெட்டிக்கொண்டு போகையில் நான் மாத்திரம் தனித்து, முகங்குப்புற விழுந்து : ஆ கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் எருசலேமின் மேல் உமது உக்கிரத்தை ஊற்றுகையில் இஸ்ரவேலின் மீதியானவர்களையெல்லாம் அழிப்பீரோ என்று முறையிட்டேன்" **எசேக்.9:8.**

இந்தப் பத்திரிகையின் 7-ம் பக்கம் கட்டத்திற்குள் மார்டின் லுத்தர் ஜெபிப்பதைக் குறித்து அச்சிட்டுள்ளேன்.

IV. மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்

நாம் தொலைக்காட்சியில் காணும் நிகழ்வுகள், செய்திதாளில் வாசிக்கும் சம்பவங்கள் போன்றவை ஆத்துமாவை உறைய வைத்து சோர்ந்து போகச் செய்கின்றன. நம்மைச் சுற்றி நடக்கின்றவை குறித்து நான் அதிர்ச்சி அடையவில்லை; மாறாக இந்த சூழலுக்கு நாம் எப்படி பதிலடி கொடுக்க வேண்டுமென்றுதான் தேவ மக்களைக் கேட்க விரும்புகிறேன்.

நம்மைச் சுற்றி நடக்கிறவற்றிற்காக கண்ணீர் விட்டுக் கதறாவிட்டால், நாம் கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களல்ல. இயேசுவானவர் எருசலேம் நகரத்திற்கு வரப்போகும் அழிவை பார்த்தபோது, அவர் நகரத்திற்காய் அழுதார். நம்மில் சிலர் ஜெபிப்பதின் மூலம் ஆண்டவரின் உள்ளத்தின் வேதனையை பகிர்ந்து கொள்வதால் நம் நாட்டின் மீது வரும் தேவனின் தண்டனை தள்ளி வைக்கப்படலாம்.

நாம் ஜெபிக்கவில்லையென நான் கூறவில்லை; மெய்தான், நாம் விண்ணப்பம் பண்ணுகிறோம்; ஆனால் நாம் நம் உள்ளத்தில் வேதனையோடு கெஞ்சுகிறோமா? என்பதே என் கேள்வி. **கிறிஸ்து இல்லாமல் சாவை சந்திக்கும் இலட்சக்கணக்கான அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரம் நமக்குண்டா?**

டேவிட் ப்ரெய்னர்டு (David Brainerd) நுரையீரல் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளி. ஆனால் திறப்பிலே நின்று சுவரை அடைப்பதிலே ஒரு மாவீரன். வியாதியின் கொடுமை அவன் வாலிபத்தை வாட்டி வதைத்தது. ஆனால் அவன் உள்ளத்தில் ஊறிய ஆத்தும பாரம் அதனை வென்றது. வட அமெரிக்கா இந்திய மக்களுக்காக (செவ்விந்தியர்) தன் ஜீவன் விட்ட தேவனுடைய மனிதனாக விளங்குகிறான்.

வட பென்சில்வேனியா காடுகளில் கடுங்குளிர் காலத்தில் முட்டளவு பனி உறைந்த தரையின் மீது முழங்காற்படியிட்டு இரவு முழுவதும் செவ்விந்தியர்களுக்காக கதறி அழுது ஜெபித்தான். ஆத்துமாக்களுக்காக ஆவியில் ஆண்டவரோடு போராடி கர்ப்ப வேதனைப் பட்டான். அவனைச் சுற்றிலும் பனி பெய்யும், ஆனால் அவன் சரீரம் வியர்வையினால் நனைந்துபோகும். கெத்சமனேயின் அனுபவம் என்று நினைக்கிறேன். வியாதி அதிகரித்தது. 29-ம் வயதில் ஆண்டவரை அடைந்தான். ப்ரெய்னர்டு ஜெபத்தினால் அமெரிக்க - வட இந்தியர்கள் மத்தியில் மாபெரும் எழுப்புதலைக் கர்த்தர் அனுப்பினார்.

V. வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழ ஜெபித்தார்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரத்த வேர்வை சிந்தினார் என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது மூன்று சுவிசேஷங்களில் சொல்லப்படவில்லை. லூக்கா மட்டுமே இதைத் தெரிவிக்கிறார், காரணம் அவர் ஒரு மருத்துவர். இரத்த வேர்வையை **ஹெமடோ ஹைட்ரோசிஸ்** என்று மருத்துவர்கள் அழைக்கின்றனர். இது சாதாரணமாக நடக்காது. இயேசு கிறிஸ்து தான் இவ்விதமாய் மரிக்கப் போகிறோம் என்பதை எண்ணி வியாகுலப்பட்டதினாலே இரத்த வேர்வை சிந்தப்பட்டது.

VI. பலத்த சத்தத்தோடு ஜெபம் பண்ணினார் எபிரேயர் 5:7

துருத்தியிலிருந்த தண்ணீர் செல வழிந்த பின்பு, அவள் பிள்ளையை ஒரு செடியின் கீழே விட்டு,

பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து **சத்தமிட்டு அழுதாள் ஆதி.21:15,16.**

And she went, and sat her down over against him a good way off, as it were a bowshot; for she said, Let me not see the death of the child. And she sat over against him, and lift up her voice, and wept.

அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள் **ஆதி.45:2.**

அன்பு தேவபிள்ளையே, அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக நீங்கள் சத்தமிட்டு அழுகிறீர்களா? அதை உங்கள் வீட்டார் கேட்கிறார்களா? ஏன் அம்மா நேற்று இராத்திரி சத்தமிட்டு அழுதீர்கள்? ஏன் அப்பா நேற்று இரவு சத்தமிட்டுஅழுதீர்கள் என்று உங்கள் பிள்ளைகள் கேட்கிறார்களா?

VII. கண்ணீரோடு ஜெபித்தார் எபிரேயர் 5:7

கண்ணீர் இல்லாத ஜெபம்
தண்ணீர் இல்லாத கிணறு

இயேசுவானவர் கண்ணீர்விட்ட மூன்று சந்தர்ப்பங்கள்

1. அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து :

   அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே வந்து பாரும் என்றார்கள்.

   இயேசு கண்ணீர் விட்டார் யோவான் 11:33-35.

2. அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது, லூக்கா 19:41.

3. அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, எபி. 5:7.

கெத்சமனே பூங்காவினில்
கதறி அழும் ஓசை

(5-ம் பக்கம் பார்க்க)

சிந்தனைக்கு

விட்டுக்கொடுத்தல் என்ற பலவீனத்தினிமித்தம் அனேக **சபைகள்** இன்று உலகத்திற்குரியதாகிவிட்டன. அதாவது உலகத்திலிருப்பது போன்ற பல **பாவங்கள்** சபைக்குள் பரவிக் கிடக்கின்றன.

உப்பாகவும் **ஒளியாக**வும் தூய்மையுடன் மாதிரியாக வாழும்படி அழைக்கப்பட்ட **சபை** தன் தனித்தன்மையை இழந்துவிட்டது.

நம்பிக்கையும் **விசுவாச**மும் இரு கிருபைகள். துன்பமாம் அலைகடலில் கிறிஸ்தவன் மூழ்காமலிருக்க அவை மிதவைகளாய் செயல்படுகின்றன. சோர்ந்து போன ஆத்துமாவுக்கு மருத்துவ குணம் கொண்ட நீரைப்போல இளைப் பாறுதலை அளிக்கின்றன.

புயலின் மத்தியில் நங்கூரம் ஒரு கப்பலைத் தாங்குவதுபோல் **நம்பிக்கை**யும் காணப்படுகிறது.

தங்களைக் **கிறிஸ்தவர்கள்** என்று சொல்லிக் கொள்ளுகிற அனேகருடைய வாழ்விலும் குளிர்ந்த நிலைதான் காணப்படுகிறது. மட்டுமல்ல, அவர்கள் சிலுவைக்கு எதிரிகளுமாயிருக்கிறார்கள்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason